171398

# திருப்போரூர் சண்முகக் கடவுள் மும்மணிமாலை

O2b.'38.'24252
N15
171398



வேலுமயிலுந்துணை

திருப்போரூர் முருகக்கடவுள்

# மும்மணி மாலை.

232
1915/II

...லியாலன் அச்சுக்கூடம்
...ழுகிணற்று வீதி,
சென்னை.

Q26:38·2192 JR
N15
171398

642
294.551

உ

வேலுமயிலுந்துணை.



திருப்போரூர் சண்முகக்கடவுள்

# மும்மணிமாலை

இது,

"சென்னைப் பூலோகவியாஸன் பத்திராதிபர்"

மஹாஞானபாநு-சதாவதானம்

ஸ்ரீலஸ்ரீ. பூ. மு. நாவலரவர்கள்மாணவகருளொருவர்

**மதுரை - எல்லப்பபிள்ளையவர்களா**

லியற்றி,

சென்னை பாப்பம்ஸ் பிராட்வே 90. கெ.

ஸ்ரீ கமலவிநாயகபஜனை சிற்சபைத்

தலைவர்

ம-ா-ா-ஸ்ரீ. இடமணி. ல. ரா. முருகேஸம்பிள்ளை

அவர்கள்

அபீஷ்டப்படி

பூலோகவியாஸன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1915ஸ்ரீ பெப்ரவரிமீ 21உ ஆதிவாரம்

ஷை சந்நிதானத்தில்

அரங்கேற்றப்பட்டது.

171398

# சாற்றுக்கவிகள்.

)(:)(

சமரசபாஷிய சித்தாந்தம்
திவ்யகவி-திருமயிலை. ஸ்ரீராகவதாஸரவர்கள்
இயற்றிய வெண்பா.

வேலைப் பெரும்புவியோர் வேட்டுந் திருப்போரூர்
மாலைக் கடம்ப மணிமார்பன்—மூலை
நடம்புரிய வெண்பா நவிலகவற் பாவுந்
தடகலிப் பாதொகுத்தான் றன்.

கலித்துறை.

தொகுத்தா னெவனவ னென்னிற் சமர்புரித் தூயவன்றாட்
குடுத்தவ ரன்புகண் டுள்ள மகிழ்ந்தவர்க் குற்றபணி
வகுத்திடு நற்குணப் பூ. முத்து வீரநா வல்லனன்பு
மிகுத்தவ னெஅனிலண் கண்டவர் கூறிடும் வித்தகனே.

அகவல்.

வித்தகர் மேவும் வியன்செனை நாட்டில்
நத்திய வடைக்கல நற்புர மமர்ந்த
வுத்தமன் மதுரை யுயர்தரப் பயின்ற
சித்தநல் லுடையான் செந்தமி ழுணர்ந்து
அல்ல லறுத்த வழகன்
எல்லப் பனெனு மெழிற்புல வோனே.

---

சென்னை, பிராட்வே. 90-நெ. ஸ்ரீ. க. வி. ப. சிற்சபை
பஜனையாசிரியரும்,
ஸ்ரீலஸ்ரீ. வீ. பா. குருநாதசுவாமிகளின் பிரதமமாணவரும்,
சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ. பூ. மு நாவலர் அவர்களிடம்
அவதானப்பயிற்சிபெற்றவருமாகிய
செந்தமிழ்ப் பிரசங்கரத்நாகரம்
ஷட்டாவதானம்,
பிருங்காசலம். தே. சி. கங்காதரபாலதேசிகர்
இயற்றியது.

எல்லப்பன் மாவிடறு மணிமாடத் திருப்போரூ
ரிறைவன் மீது
வல்லப்பன் மணங்கொழிக்கு மும்மணிமாலைத்தனையே
வரையில் ஞான
எல்லப்பன் பூ. முத்து வீரநா வலன்சீட
னின்ப மிக்கோன்
எல்லப்பன் எனும் புலவன் புவிகளிக்கு வாய்மைபொடிவ்
கிசைத்தா னின்றே.

உ

வேலுமயிலுந் துணை.



திருப்போரூர் முருகக்கடவுள்

# மும்மணி மாலை.

வேண்பா.

செம்மணி மார்பன் றிருச்சம ராபுரியான்
மும்மணி மாலைக்கு முன்னருள—தம்மணி
யாயன்பர் கொண்ணிம்ப யானைமுகத் தெந்தையருட்
பாயன்பு கொண்டுபுரப் பான்,

## நூல்.

வெண்பா.

தேரினையே வேண்டித் திகழ்பரவும் மாவருளைப்
பாரினிலே கொள்ளாப் பவப்பிணியின்—காரிருளைப்
போக்கியெனை யாண்டருளும் போரூரி லெந்நாளும்
நீக்கமிலாக் கொண்ட நிலை.

கலித்துறை.

நிலையிலா வாழ்வை நிஜமென வெண்ணியிந் நீணிலத்தி
லலையிற் றுரும்பென வாடிநின் றேனெனை யாதரிப்பாய்

நலமிக ளொண்முலைப் பாலினை யுண்ட! நின் வண்மரையைத்
தலைமிசைச்சூடினேன் தண்டிருப் போரூர் தயாநிதியே,

அகவல்.

தயாநிதி யெனப்பற் றாணிலோர்க்கும்
வியாபித் திலகும் வித்தகன் றன்கழல்
கொள்ளாக் கயவர் கூட்டுற வதனை
நள்ளா வுளத்தை நானடைந் திடவும்
வறுமைப் பிணியின் வாதையின்றி நற்
றிறமையா லென்றுஞ் சேவடி துதிக்க
காக்கக் கடனே கசடனின்
போக்கொழித் தாள்வாய் போரூ ரிறையே.

வெண்பா.

இறைவனென வெண்ணு மிமைக்கு மளவில்
குறைவதனைப் போக்குங் குறிப்பை—அறைவதற்கே
முற்றுமுணராக் கொடிய மூடனேன் போரூரா
பற்றுவைத் தேனுன் பதம்.

கலித்துறை.

பதமே கருத்தில் பதிவேற வுன்னிப் பயன்பெறநல்
விதமே செறிந்த வியனுருஞ் சந்த விதத்தெழுபண்
ணிதமேவ சொற்ற வொருவனுக் கன்பிங் கிழைத்தவவும்
புதமே விளங்குஞ் சமரா புரிவரும் புண்ணியனே.

அகவல்,

புண்ணினிற் சூர்வேல் போதிந்து வருந்திய
வண்ணம் பழவினை மாட்டே மும்மல
தீவினைப் போதிந்து தியக்குறுஞ் சிறியே
னவியைக் காக்க வறுமா முகத்துக்
கடவுணீ யெனக் கருதிவந் தடையுந்
திடமிலா வேழைச் சீர்பெற நின்றிரு
வருட்புரிந் தாளு மாரணத் தெளிவே
பொருப் புயர்பிரணவ பொலன் குவட்டேற்ற
வானூர் துலாத்திடை மணிபொன் னிறுக்க
கானவ ரேயுங் கவின்றிருப் போரூர்
குடி கொளுமரசே கொடியேன்
மிடிதனைத் தீர்க்குஞ்செவ் வேண்முருகோனே.

வெண்பா.

ஏதில்லா ரைக்காக்க வெங்கு மிருப்பதுபோற்
றீதில்லாப் போரூர் செறிந்தவனென்—மீதில்லா
வன்மை யறிவேனோ வாட்செய் யிதுதருணம்
கன்ம வினையொதுங் கவே.

கலித்துறை.

வேய்முனைத்தேனிழல் விண்பிறைக் கோடு விதிர்த்திடுந்தண்
ணேய்திருப் போரி வளர்தெய்வ மேயிந்த வினனுக்குத்
தாய்தரு மன்பிற் றயைபுரிந் தாளத் தருணமுடைத்
தாய்பிரி துண்டோ துணைநினை யன்றியித் தாரணியே.

அகவல்.

தாரணி முல்லை தடங்கண் மடவார்
சீரணி யாடற் செறிதரு மொருவன்
கல்லைப் பெண்ணுரு காண நடந்து
தொல்லை களைந்த துழாவணி மார்பன்
மார்பகத் துடையாள் மனமது களிக்க
சீர்கழற் கொண்ட தெய்வக் குன்றே
வான் வருங்கங்கை மகிழ்ந்த முகிலே
தேன்றருங் கடப்பஞ் செறிதிண் டோளா
அறுவர் தருமுலைப் பாலமு துண்ட
சிறுவாய் மதலாய் திகடருங் குறமான்
றழுவிடுந் தோளா சதங்கைக் காலா
தொழும்பனேன் வினைக டொலைத்திடக் கார்சிறச்
சிந்துர மேவிச் சீர்பெறும்
சுந்தரப் போரூர் துகளறு மணியே.

வெண்பா.

மணியரவு புற்றெளிப்ப மாவோதை மன்னுந
திணிபோரூர் வழவந்த தேவே—பணியுடைய
கண்ணு றிருவர் களிக்குஞ் சுகமுகிலே
யெண்ணாது காத்கா ளினி.

கலித்துறை.

இனிக்கும் படியடி யாருள் ளமரு மெழிற்சுவைசெங்
கனிக்கு முதிர்ந்திடுங் காங்கேய னேதிருக் கார்பொதிப

சென்னைப் பூலோகவியாஸன் பத்திராதிபர்
மஹாஞானபாநு-சதாவதானம்
ஸ்ரீலஸ்ரீ. பூ. மு. நாவலர் அவர்கள் மாணவகருளொருவர்

## நரசிங்கபுரம். ஸ்ரீமந். பொ. இரத்தினம்பிள்ளையவர்கள்

இயற்றிய,

# சிறப்புப்பாயிரம்.

——)( - )(——

சீர்தருங் கற்பகத் தார்கிளை மலிந்தென
பூதல நீதிநூ லாதியா வகுத்தசம்
பெளவங் கடந்த ஔவையம் பிராட்டி
அருநற விழிந்த திருவுரைப் பொலிவே
வளமுயர்ந் தோங்கி நளிருமிந் நாட்டில்
பலமுறு மளியினங் கலாம்விளை சோலை
பராவிய வரங்கம் கராவுறை துறைதொறூஉம்
சங்கஞ்சூன் முதிர்ந்து திங்கண்முத் துயிர்ப்ப
வாகர மாகுநன் னாகையுஞ் சூழ்தரச்
சாங்கடம் வீய்த்தருள் வேங்கடங் குமரி
பன்னலம் பொதிந்த விந்நான் கெல்லையுள்
பன்னகம் பரித்த பொன்கைத் தாத்திரிக்
கொன்னணி கலனுக் கன்னணி யாவுயர்
தேரூர் வீதிப் போரூர் வாழும்
மையன் விசாகன் றுய்ய னிட்கலன்
உறுமுகங் குறப்பெணின் புறவரும் வடிவன்
றுவர்வாய்த் தேப்பிடி சவரலங் காரன்
பொன்னூர் கடுக்கை மன்னிய மவுலிதம்
பாலநேத் திரத்துழி சாலவா தவப்பொறி
வெளிவந் திருமூன் றொளிர்முக மாறும்
பன்னிரு புயத்தொடு துன்னிய வாகையன்
ஒருகா னினைக்கி னிருகாற் றோகை
பாரோர் வந்தனைக் காரோ கணித்தருள்
ஞாங்கர் கரத்தன் பாங்க ருலவிய
குக்கிடை பதாகை தக்கதா யுயர்த்தோன்
சரவணன் முருகற் பரவுவண னாடி
இருமறை யோவிடு மருமறைத் தாட்குத்
தஞ்சமென் றுன்னி செஞ்சொன்மும்மணி
மாலையொன் றுரித்தா மாலைப் போக்குவான்
அன்னவ னூரெனின் தன்னலங் கேண்மின்
அந்தண ராதி பந்தறப் போற்றுந்
தெள்ளிய சீர்குல வள்ளுவ மரபினன்
நூறவ தானஞ் சீருறப் புரிந்தோன்
முத்தமி ழுணர்ந்தபூ முத்தாவீ ரப்பேர்
நாவல் லோன்பால் மேவிய சீடன்
இலக்கிய நூற்பல விலக்கண முணர்ந்தோன்
மதுரை வாச்கியன் மதுரை
வல்லப்ப னெனும் வல்லவன் றனை.

## வித்தியாசிரியர் வணக்கம்.

மாஞ்சோலைக் குயிலொலிக்குந் திருப்போரூர்
வாழ்முருகன் மலர்த்தாளேவா
ஞைஞ்சோலை யெனவரும்மணிமாலை சாற்றிடற்கு
நல்லா ருகும்
பூஞ்சோலை கருமுத்து வீரவல்லோ னவதானி
பொற்று டன்னைத்
தேஞ்சோலை யளிவிரும்பு மாறுதினஞ் சிந்தைதனிசைச்
சேர்த்து வாழ்வாம்.

## அவையடக்கம்.

செந்தமி ழுணர்ந்த பண்பால் செப்புமும் மணிமாலை போல்
நந்தமி ழுரைக ளுண்டேல் நலமிகுஞ் சிறகா ரன்னஞ்
சிந்தமி ழுகம்பி ரித்துத் தீஞ்சுவை கொளுமாப் போன்மதீர்
நந்தமி ழொளிர வைப்பீர் நற்றமிழ்ப் புலவ ரேறே.

முனிக்கு மருட்செய்த முன்னவனே தனி முதறிஞர்
தனிக்குஞ் சமர புரிவாழு மென்றன் றயாநிதியே.

## அகவல்.

நிதியைத் துடையா னெடுமா லுலகிலும்
விதியைக் குறிப்பான் விழைந்த பதியிலும்
வெள்ளிமால் வரையிலும் விபுதர் குழுவிலு
மொள்ளிய கந்த வுயர்வெற் பிடையிலும்
திருப்பரங் குன்றஞ் செந்திலம் பதியிலுங்
கருப்பரங் குன்றிடுங் கவினாவின் பதியிலும்
மருவேர கத்தும் வந்தடியார் நிலை
திருவேர கத்துந் திருக்குன் றடங்கலும்
பழமுதிர் சோலை பரந்தவன் வானவிர்
மழைமுதிர் சோலை வாழ்தணி கையிலும்
வேறுபூ தரத்தும் விழைந்தது போற்றிரு
வேறுபூம் போரூ ரியற்பதி யமர்ந்த
பன்னிரு வரைநிகர் பன்னிரு தோளா
கன்னிய ரிருவர் கலந்திடு மார்பா
பூங்கணைக் கிழவன் பொறித்திடும் வினைசேர்ந்
தாங்கவ னுக்கு அன்புதே ராது
பண்டை வினையால் பலப்பலப் பெருநோய்
கொண்டு ழலாது குறித்தெனை யாள
கழலணித் தாளைக் கருதித் துதித்த
மழலை தனக்கு வரமருள் வாயே.

## வெண்பா

வாழ்த்துநருந் தென்போரி வான்வரையைக் கண்டுமுடி
தாழ்த்துநரும் வெம்பிறவி தாழ்த்துநரே—கேழ்த்தமயின்
மீதேறும் ஞானமணி வித்தகருஞ் சண்முகனைப்
போதேறும் பாதம் புயம்.

## கலித்துறை.

புயல்கண் டிருந்தது மங்கையர் கூந்தல் பொதிந்திடுசூல்
கயல்கண் டிருந்தது போரூ ரணிபணை காதல்வள்ளி
மயல் கண்டிருந்தது நின்மனத் தேற்றம் வணங்குமென்றன்
செயல் கண்டிருந்தது நின்மறை யாருந் திறத்தடமே.

17139

அகவல்.

தடமா மான்குளத் திடைப்பொறி யாகினை
கங்கையின் மிதக்குந் துங்கும தாகினை
சரஹண வாவி நிரைகர விருந்தனை
கார்த்திகை யறுவர் கோர்த்த தனப்பா
லுண்டி ருந்தனைபி.னெண்டிசை யளித்தா
ளன்பு கொண்டெடுக்க வின்புறு மாறு
உருவ மொன்றாக விருந்தனை கைலை
வரையிலும் மற்று நிரைய கத்திடையும்
தகரப் பரிசெலுத் திகழ்மிக வுற்றனை
வணங்கிமுன் செல்லா வணங்கு வெண்மறை
முறையான் றன்னைச் சிறைபா விருத்தினை
யவனறிந் துரையாக் கவனக் குடிலையை
யவனைப் பெற்றோ னவனைப் பெற்றோன்
சிரவணத் துரைத்தனை நறவணைக் கடம்பா
வானவ ருய்யத் தானவர் நைய்ய
விலைவே லேந்தினை நிலைவே லுற்றிடு
தாரகன் றன்னைப் பாரகத் தொழிக்க
கருப்போர் கொய்யுந் திருப்போ ரூரிற்
முன் வந்தருளி யின்னருள்
புரிந்திடு வாய்சொல் சரிந்திட வினையே.

வெண்பா.

வினைதழையும் வெம்பிறவி வேட்டுலக விச்சை
யினையொழியா தேக்கந்தி ரென்ற—னலையோடு
அப்பனுற வோர்நீயே யன்னமுறங் குப்போரூர்
மெய்ப்பரம தேசிகசெவ் வேள்.

கலித்துறை.

வேடச் சிறார்பிடி பார்த்துக் கதறிட விட்டகன்றை
நீடக் கொடியாற் பிணித்ததன் மேற்கொண்டு நித்தியமு
மாடு கருதிடும் பூதரப் போரி யமரர்பிரான்
தேடக் கிடைத்திடுஞ் செந்தா டனைத்துதி செய்மனமே.

அகவல்.

மனங்கா தலித்த வாறெலா நன்மை
தினங்காத் தளிக்கும் செவ்வேள் சீர்தினைப்
புனங்காத் திடுவாள் புகழ்வான் பாலை
வனங் காத்திட்ட வாணனைப் பாட
வினங்காத் திட்ட வேந்தன் வானிற
வனங் காத்திட்ட வருமலர்ச் சோலை
தனங்காத் திடுதண் போரூர்
கனங்காத் திடுமெங் கடம்பனே யருளே.

வெண்பா.

அருட்பொழியுங் கண்ணான் அறுமா முகனென்
னிருட்டிமிரம் போக்கு மிறைவன்—தெருட்கமல
வாவிசூழ் போரூர் வதியும் பெருமான்றாள்
ஆவிக் கொருதுணையா மால்.

கலித்துறை.

மாலிங் களந்தது வையக மென்பர் மதிப்புலவ
னூலிங் களந்தது வேலவ னென்பர் நுவலருங்கூர்
வேலிங் களந்தது தானவர் கூட்டம் விருப்பியென்றண்
பாலிங் களந்தது போரூர் முருகன் பதாம்புயமே.

அகவல்.

அம்பினுங் கொடிய அரிவையர் கண்கள்
நம்பி யுழலா நல்வகை யளிப்பான்
நிம்ப நிழற்பால் நேடிடங் கொண்ட
தும்பி முகத்தான் துணைவன்
வெம்பிணி தீர்க்கும் வேலவன் மாதோ.

வெண்பா.

தோன்று முடற்பிணிக்குஞ் சூழ்மும் மலப்பிணிக்கு
மான்றபிற விப்பிணிக்கு மம்மருந்தாம்-வான்றமரும்
வந்தொழக் காதலிக்கும் மாக்ஷிநிறை போரூரு
வந்துறையுஞ் சேவ்வேண் மரை.

கலித்துறை.

மரையே நிகர்த்த வொருபத்து றுப்பன் மருகனெங்கோன்
விரையே பழுத்த சுணங்கமர் பொன்முலை வேடர்குல

நிரையே பழுத்த வொருமா ஆவக்கு நிதிசமளூர்
வரையே பழுத்த வான்கனி தன்னை வருடுவையே

அகவல்.

வையக மாந்தர் வாழ்வு பெற்றுய்ய
பொய்கை வளத்துப் போரூர்
ஐயனைப் பணிவா மன்புகொண் டின்றே.

வெண்பா.

இன்பஞ் சிறிதா மிடரோ பெருமலையாம்
புன்போகங் கொல்லும் புவிமாஹுந்— துன்போட
தென்னுடும் போரூர் திருமான் கரத்தானின்
பொன்னுடுஞ் சேயன் புகல்.

கலித்துறை.

புகலிடங் கொண்ட வமரர்த் துயர்தனைப் போக்கிடச்சூ
ரகலிடங் கொண்ட வசுரரை மாய்த்த வயிற்கரத்தா
னிகலிடங் கொண்ட பகுவா யனங்க ளிருந்திடுந்தண்
ணகலிடங் கொண்ட சமளூர் முருகனை அஞ்சலியே.

அகவல்.

அஞ்சலென் றன்றடை யரிவைக்கு கந்து
கஞ்சந் தந்தொரு தடங்கை யளிதமேனின்
மஞ்சுலாவிடும் வயைலீசூர் போளூர்
செஞ்சரண் டன்னைச் சிந்திப் பாமே.

வெண்பா.

சிந்தூரம் விட்டுத் திரும்பும் பிடிமேவு
முந்துவான் சிங்கங்கண் டோலமிடச்—செந்துவர்வாய்
கானக் குறமாது கண்டணைக்கும் போரூர்வாழ்
ஞானக் கலாநிதியே நாடு.

கலித்துறை.

நாட்டமுற் றென்வினை யாவையுந் தீர்த்து நலமறுமென்
பாட்டையுங் கேட்டு பவமறுத் தாளும் பலிக்குறவர்
கூட்டமுற் றுடோள் குறிக்குங் கிழவன் குடிகொண்டிடுங்
கோட்டநற் போரூர் திருப்பதி காணக் குறையறுமே.

## அகவல்.

மேதரு ஞான விருப்பா போற்றி
சாதகக் குடிலைத் தலைவா போற்றி
எனையாண் டருளு மிறைவா போற்றி
முனைவினைக் கடியு முதல்வா போற்றி
காரூர் சோலை கதிதரு முத்தப்
போரூ ரண்ணல் போற்றி வேன்மயில்
போற்றி சடாக்கரம் போற்றி
தேற்றுநின் னன்பில் வருள்தேர்ந் திடவே

## வாழி.

வையம் வாழிய மாமறை வழிய
ஐயன் பன்னிரு கையன்றாள் வாழிய
துய்ய வாசான் றுணையடி வாழிய
உய்யும் பத்தர்கள் வாழியிங் கோங்கியே.

முற்றிற்று.

171398

9B
3.39